பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 02 வெள்ளிக்கிழமை 17.12.2021 கதிர் 270

## ஆணின் சடலம் பசறையில் மீட்பு

பசறையில் ஆண் ஒருவரின் சடலம் இன்று மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பசறை நகரிலிருந்து மடூல்சீமைக்குச் செல்லும் வீதியிலிருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் கள்ளுக் கடைக்குச் செல்லும் ☞2

# எதிர்ப்புகளையடுத்து காணி சுவீகரிப்பு இடைநிறுத்தம்!

(இ.கலையமுதன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்., வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் தனியார் காணிகளை சுவீகரிக்கும் முயற்சி இன்று தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இன்று காலை 9 மணியளவில் கீரிமலை ஜே/226, காங்கேசன்துறை மேற்கு ஜே/223 பகுதிகளில் 21 பேருக்குச் சொந்தமான 30 ஏக்கர் காணி நகர அபிவிருத்தி அதிகார சபையின் தேவைக்கு சுவீகரிப்புக்காக அளவீட்டுப் பணிகள் நில அளவை திணைக்களத் ☞2




# ஒமிக்ரோன் வைரஸ் பரவலால் அழிவைச் சந்திக்கும் இலங்கை

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

ஒமிக்ரோன் உள்ளிட்ட வைரஸ் பிறழ்வுகளின் பரவல் அதிகரித்துள்ளதால், நாடு எதிர்காலத்தில் ஆபத்தை – அழிவைச் சந்திக்கக்கூடும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் சுகாதார வழிகாட்டுதல்களைத் தளர்த்துவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளமையானது ஏதாவது அழுத்தங்களுக்கு அடிபணிந்தா என்பது தொடர்பில் ☞2



மனோ அணி, சு.கவின் ஆதரவுடன் ஐ.தே.கவின்

## கொழும்பு மாநகர சபை 'பட்ஜட்' நிறைவேற்றம்!

ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டுப்பாட்டின்கீழுள்ள கொழும்பு மாநகர சபையின் வரவு - செலவுத் திட்டம் 79 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2022 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 90 வாக்குகளும், எதிராக 11 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

கொழும்பு மாநகர சபையில் நேற்று பாதீடு முன்வைக்கப்பட்டது. இரவு 9 மணிவரை விவாதம் இடம்பெற்றது. அதன்பின்னர் நடைபெற்ற வாக் ☞2

## இலங்கையிலிருந்து வெளியேறியுள்ளார் 'ஒமிக்ரோன்' தொற்றாளர்களில் ஒருவர்!

### பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு



இலங்கையில் நேற்று உறுதிப்படுத்தப்பட்ட ஒமிக்ரோன் வைரஸ் திரிவு தொற்றிய மூவரில் ஒருவர், நாட்டிலிருந்து வெளியேறியுள்ளார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விமான நிலையத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட சில பி.சி.ஆர். மாதிரிகள், மேலதிக பரிசோதனைக்காக ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட பின்னர் குறித்த ஒமிக்ரோன் தொற்றாளர் அடையாளம் காணப்பட்டார்.

இது குறித்து ஆராய்ந்த ☞2

## இவ்வருடம் 10 ஆயிரத்தைத் தாண்டிய சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள்

இலங்கையில் இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் நவம்பர் 31 ஆம் திகதி வரை சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 10 ஆயிரத்து 713 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று வெகுஜன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

5 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பில் 1,632 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளமை வருத்தமளிக்கின் ☞2

## பெண்ணைச் சுட்டுப் படுகொலை செய்த இளைஞர் நஞ்சருந்திய நிலையில் கைது

(வவுனியா நிருபர்)

வவுனியா, நெடுங்கேணி, சேனைப்புலவுப் பகுதியில் பெண் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவரைப் படுகொலை செய்தமை தொடர்பில் இளைஞர் ஒருவர் நெடுங்கேணிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சேனைப்புலவுப் ☞2

## யாழில் வீட்டுக்குள் புகுந்த 11 அடி நீளமான முதலை!

யாழ், சாவகச்சேரி - கச்சாய் வீதியில் உள்ள வீட்டுக்குள் புகுந்த 11 அடி நீளமான முதலையை கிளிநொச்சி வனஜீவராசிகள் திணைக்களத்தினர் பிடித்து முறிகண்டி - புலிக்குளத்தில் இன்று காலை விட்டுள்ளனர்.



## நண்பியை மிரட்ட கழுத்தில் கயிறு மாட்டியவர் மரணம்!

### யாழ்ப்பாணத்தில் சோகம்

தனது நண்பியை மிரட்டுவதற்காக கழுத்தில் கயிறு போட்டு நேரலை காணொலியில் காண்பித்த இளைஞர் கயிறு இறுகி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை யாழ்ப்பாணம், ☞2

## ஆணின் சடலம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒற்றையடிப்பாதையிலேயே 60 முதல் 65 வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் சுமார் இரண்டு மணி நேரம் அவ்விடத்திலேயே விழுந்து கிடந்தார் எனவும், அவ்வழியில் செல்பவர்களால் அவசர நோயாளர் காவு வண்டி சேவைக்கு தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அவ்விடத்துக்குச் சென்ற அவசர நோயாளர் காவு வண்டி ஊழியர்களால் குறித்த நபர் மரணித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பசறை பொலிஸார் மரணித்த நபரிடமிருந்து மின் கட்டண பற்றுச்சீட்டு ஒன்றை மீட்டெடுத்தனர்.

பற்றுச்சீட்டில் பசறை, புஹூல்வத்தைப் பகுதி என விலாசமிடப்பட்டிருந்தமையைத் தொடர்ந்து மரணித்த நபர் புஹூல்வத்தைப் பகுதியைச் சேர்ந்தவராக இருக்கலாம் எனக் கருதிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## எதிர்ப்புகளையடுத்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தால் முன்னெடுக்கப்படவிருந்தது.

அளவீட்டுப் பணிகளைத் தடுத்து நிறுத்துவதற்காக குறித்த இடங்களில் ஒன்றுகூடிய காணி உரிமையாளர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொது மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

தொடர்ந்து, காணி அளவீட்டு நடவடிக்கைகளைத் தற்காலிகமாகக் கைவிட்டு நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் அவ்விடத்தில் இருந்து சென்றனர்.

## ஒமிக்ரோன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சந்தேகம் எழுகின்றது என்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத் தின் தலைவர் உபுல் றோஹண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் ஒமிக்ரோன் தொற்றாளர்கள் கண்டறியப்படும் சூழலில் பண்டிகைக் காலங்களில் பொதுமக்கள் சுகாதார ஆலோசனைகளைக் கடைப்பிடிக்காமல் செயற்படும்போது நாடு பாரிய அவதான நிலையை நோக்கிச் செல்லக்கூடும்.

இந்தப் பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட சட்டங்களை மேலும் தளர்த்துவது எவ்வளவு நியாயமானது மற்றும் நடைமுறையானது என்ற கடுமையான கேள்வி எழுகின்றது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் சுகாதார அதிகாரிகள் கொரோனாத் தொற்றுநோய் குறித்த தரவுகளின் அடிப்படையில் இந்தத் தளர்வைச் செய்துள்ளனரா? அல்லது யாருடையதாவது அழுத்தங்கள் காரணமாக இவற்றைச் செய்கின்றனரா? என்ற பாரிய பிரச்சினை எங்களுக்கு உள்ளது.

எவ்வாறாயினும், கொரோனா தொற்றுநோய் எதிர்காலத்தில் நாட்டில் அழிவை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. இந்நிலையில், பண்டிகைக் காலத்தைப் பொதுமக்கள் கொண்டாடிய பின்னர் அதிகளவில் நோயாளிகள் பதிவாக வாய்ப்புண்டு. இப்போதும் கூட, ஊடகங்கள் மற்றும் உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களை விட அடிமட்ட அளவில் அதிக நோயாளிகள் பதிவாகி வருகின்றனர் - என்றார்.

## கொழும்பு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கெடுப்பின் பாதீடு நிறைவேறியது.

கொழும்பு மாநகர சபையில் 119 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் நிலையில் 101 பேர் வாக்கெடுப்பில் பங்கேற்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பவற்றின் உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

## இலங்கையிலிருந்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போது, அவர் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளார் எனத் தகவல் வெளியானது. குறித்த நபர் இலங்கைக்கு வந்தபோது, குறைந்தது ஒரு பி.சி.ஆர். பரிசோதனையேனும் செய்திருக்கின்றார்.

விமான நிலையங்களில் இருக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலம், வைரஸ்திரிவு நாட்டுக்குள் நுழைவதைத் தடுப்பது எங்களுக்கும், உலகில் வேறு நாடுகளுக்கும் முடியாமல் போயுள்ளது.

அவர், நாட்டிலிருந்து வெளியேறிய நபராக எங்களிடம் தகவல் உள்ளது. ஆனால், அவர் எவ்வாறு வெளியேறினார் என்பது குறித்து தொடர்ந்தும் விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது - என்றார்.

## நண்பியை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாச்சிமார் வீதியில் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த வீரசிங்கம் ஸ்ரானின் ஜெயசிங்கம் (வயது-31) என்ற இளைஞர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து அச்சகம் ஒன்றில் பணியாற்றி வருகின்றார்.

அவர் கதிரையில் ஏறி தான் தங்கியிருக்கு அறையின் கூரை மரத்தில் கயிற்றைப் போட்டு கழுத்தில் சுருக்கிட்டு தனது நண்பிக்கு நேரலை காணொலி அழைப்பை எடுத்து மிரட்டியுள்ளார்.

எனினும், கதிரை சரிந்ததால் நிலை தடுமாறிய இளைஞரின் கழுத்தில் கயிறு இறுகியதால் அவர் உயிரிழந்துள்ளமை பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மரண பரிசோதனைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் முன்னெடுத்துள்ளார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## பெண்ணைச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பகுதியில் கடந்த புதன்கிழமை மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 31 வயதான சத்தியகலா என்ற பெண் மரணமடைந்தார்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட நெடுங்கேணிப் பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பில் மரணமடைந்த பெண்ணின் உறவினரான 31 வயது இளைஞர் ஒருவரை அப்பகுதியில் உள்ள தோட்டம் ஒன்றில் வைத்துக் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸார் குறித்த இளைஞரைக் கைதுசெய்ய முற்பட்டபோது அவர் நஞ்சு மருந்து அருந்தியுள்ளார். இதையடுத்து அவர் உடனடியாக நோயாளர் காவு வண்டி மூலம் பொலிஸ் பாதுகாப்புடன் வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், குறித்த இளைஞர் தோட்டத்தில் மறைந்து இருப்பதற்கு உதவிய குற்றச்சாட்டில் இருவர் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டு அவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (100)

## இவ்வருடம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
றது என்றும் அவர் கூறினார்.

இவர்களில் 6 முதல் 10 வயதுக்கிடைப்பட்ட 2 ஆயிரத்து 626 சிறுவர்களும் அடங்குகின்றனர் என்றும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேலும் குறிப்பிட்டார்.


## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.




## விளம்பரத் தொடர்புகளுக்கு தொலைபேசி இலக்கம்- 076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## உண்மைகளை மறைக்கும் சிங்களம்

2022 மார்ச்சில் – அதாவது இன்னும் மூன்று மாதங்களில் – ஜெனிவாவில் – ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் – இலங்கைக்குக் கடும் நெருக்கடி ஏற்படும் என்று எச்சரித்திருக்கின்றார் முன்னாள் அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ராஜித சேனாரத்ன.

"இலங்கை தொடர்பில் இம்முறை கடுமையாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றே எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

"சர்வதேசத்துடனான நல்லுறவை (கொழும்பு அரசு) பேணவில்லை. மனித உரிமைகளை மீறும் 45 நாடுகளில் இலங்கையும் இடம்பெற்றுள்ளது." – இப்படி அவர் கூறியிருக்கின்றார்.

அவரது கூற்றில் உண்மை இருக்கலாம்; இருக்கின்றது. ஆனால் அதில் நேர்மை இல்லை. கரவுதான் பொதிந்து கிடக்கின்றது.

மனித உரிமை மீறல்கள் விவகாரத்தில் கருத்துக் கூறுவதற்கு இலங்கையின் பௌத்த, சிங்களத் தலைவர்கள் எவருக்குமே நெஞ்சுரமும் இல்லை; நேர்மைத் திறமும் இல்லை;சத்திய வாக்கும் கிடையாது.

விக்கிரமபாகு கருணாரத்ன போன்ற ஒரு சிலரைத் தவிர, நடந்த உண்மைகளை வெளிப்படையாக ஒப்புக் கொள்ளும் முதுகெலும்பு எந்தச் சிங்களத் தலைவர்களுக்குமே கிடையாது. டாக்டர் ராஜித சேனாரத்ன எம்.பியும் இதற்கு விதிவிலக்கல்லர்.

மனித உரிமைகள் விடயத்தில் உண்மையைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டு, அதன் மேல் நிலையான – நீடித்த – நீதியான – புரிந்துணர்வு நிலைமையையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் நேர்மைத்திறன் அவர்களுக்குக் கிடையவே கிடையாது.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழர் தேசத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல் நடவடிக்கைகள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்றவை தொடர்பில் நீதி, நியாயமான விசாரணைகளுக்கு இணங்க மறுத்தமைக்காகவே ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு நெருக்கடி காத்திருக்கின்றது என்று அடிப்படை உண்மையைக் கூட வெளிப்படையாகப் பேசும் திராணி அரச தரப்பினர் மட்டுமல்லர், எதிர்க்கட்சியினர் – ஏன் ஜே.வி.பியினர் உட்பட – எந்த சிங்கள நாடாளுமன்ற உறுப்பினருக்கும் கிடையாது.

அதனால்தான் சர்வதேசத்துடன் கோட்டாபய அரசு நல்லுறவைப் பேணாதமையால் ஜெனிவாவில் அரசுக்குக் கடுமையான நடவடிக்கைகள் காத்திருக்கின்றன என்ற பாணியில் கதை விடுகின்றார் டாக்டர் ராஜித சேனாரத்ன.

உண்மை சுடும். அதனால் உண்மையை நெருங்க அஞ்சுகின்றார்கள் தென்னிலங்கையின் சிங்களத் தலைவர்கள். பொய்மையில் அரசியல் பிழைப்பு நடத்த முயலுகின்றார்கள்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இழைக்கப்பட்டவை யாவை என்று ராஜித சேனாரத்ன உட்பட்ட எதிர்க்கட்சியினருக்கும் இப்போதைய ஆளுந்தரப்பினருக்கும் நன்கு தெரியும். அவற்றின் சூத்திரதாரிகளே அவர்கள்தான். அதைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டால் – வெளிப்படுத்தினால் – உண்மையை வெளிப்படுத்தினார்கள் என்பதை விட சிங்கள தேசத்தின் கொடூரத்தை ஒப்புக் கொண்டார் என்றாகிவிடும். அதனால் அதை மறைத்துப் பேசுகின்றார்கள். அதில் டாக்டர் ராஜித சேனாரத்னவும் கூட அடக்கம்தான்.

நடந்த கொடூரங்களை ஒப்புக் கொள்வதும் அவற்றுக்காக நீதி தேட இணங்குவதும்தான் நேர்மையான அரசியலாக இருக்க முடியும். அதை விடுத்து நடந்த கொடூரங்களை – மனித உரிமை மீறல்களை – யுத்தக் குற்றங்களை – மூடி மறைத்தபடி, ஒரு தரப்பை இன்னொரு தரப்பு விமர்சிக்க முயலும் சிங்கள எதிர்க்கட்சிகளின் நடவழக்கை சட்டியைப் பார்த்து பானை கறுப்பு என்றதாம் என்பது போலத்தான் இருக்கின்றது.

# உறுதியான சூழ்நிலை நாட்டில் உருவாக பயங்கரவாதத் தடைச்சட்டமே காரணம்!



## கமல் குணரத்ன பெருமிதம்

இலங்கையில் இன்று உறுதியான சூழ்நிலையொன்று உருவாக பயங்கரவாத தடைச் சட்டமே பாரிய சாதகத்தன்மையையும், ஒத்துழைப்பையும் ஏற்படுத்திக்கொடுத்தது என பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தேசிய பாதுகாப்பிற்கு எந்தவித அச்சுறுத்தலும் இல்லாத விதத்தில் எவ்வாறு பயங்கரவாத தடைச் சட்டத்தை திருத்துவது என்பதை நாம் ஆராய்ந்ததுடன், இது தொடர்பாக அறிக்கையை மூன்று வாரங்களுக்கு முன்னர் ஜனாதிபதியிடம் ஒப்படைத்தோம் என கமல் குணரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இந்த விடயங்களில் சர்வதேச தரப்பினர் ஒரு காரணியை வெளிப்படுத்தி அறிக்கையொன்றை முன்வைக்கையில், அதற்கு நாம் பதில் தெரிவிக்கத் தயாராகும்போது, அது தொடர்பான வேலைத்திட்டங்களில் ஈடுபடுகின்ற சந்தர்ப்பத்தில் உடனடியாக மற்றப்பக்கத்தில் வேறொரு அறிக்கையை முன்வைத்து முற்றிலும் மாறுபட்ட காரணிகளை வலியுறுத்துகின்றனர் என அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

# புத்தாக்க அரங்க இயக்கத்தின் மெய்நிகர் அரங்க கதையாடல்

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் மெய்நிகர் இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல் தொடர் 10 நிகழ்வு மார்கழி மாதம் 19,20,21,22,23 ஆகிய திகதிகளில் இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் து.கௌரிஸ்வரன் (இலங்கை) கூத்து மீளுருவாக்கம் செயற்பாடும் கோட்பாடும், 20.12.2021 திங்கட்கிழமை காரைக்கவி கந்தையா பத்மானந்தன் (இலங்கை) நாடகமும் நானும், 21,12.2021 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க.கஜவிந்தன் (இலங்கை) குணமாக்கல் அரங்கு, 22.12..2021 புதன்கிழமை வேலு சரவணன் (தமிழ்நாடு இந்தியா) குழந்தைகளின் ஆளுமை விருத்தியில் சிறுவர் நாடகங்களின் வகிபங்கு, 23.12.2021 வியாழக்கிழமை முனைவர் கீ.பார்த்தீபராஜா (தமிழ்நாடு இந்தியா) தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் ஆகிய விடயங்களில் கதையாடவுள்ளார் .

நிறைவுரையை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி. அருள்குமரன் வழங்கவுள்ளார்.

இந்த இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 647334 8261கடவுச் சொல் itm ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.




# அருட்தந்தை ஜோன் ஹேர்பட்டின் திருவுருவச்சிலை திறந்துவைப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1990 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்களுக்காக குரல்கொடுத்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்ட அருட்தந்தை ஜோன் ஹேர்பட்டின் திருவுருவச்சிலை மட்டக்களப்பில் திறந்துவைக்கப்பட்டது. ஊரணிச் சந்தியில் வாவிக்கரை பூங்காவுக்கு அருகில் இந்த சிலை கடந்த வியாழக்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது. இலங்கை ஜேசுசபையால் நிர்மாணிக் கப்பட்டுள்ள இந்த சிலையின் திறப்பு விழாவில் மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு திறந்து வைத்தார். இந்த திறப்பு விழாவில் இலங்கை ஜேசுசபையின் தலைவர் உட்பட அருட்தந்தையர்கள், ஜேசுசபை துறவிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். 1948 ஆம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து மட்டக்களப்பு வருகைதந்த அவர் புனித மைக்கேல் கல்லூரி ஆசிரியராகவும் தொழிநுட்ப பயிற்சி கல்லூரியின் ஸ்தாபகராகவும் செயற்பட்டதுடன் மட்டக்களப்பின் விளையாட்டுத்துறைக்கும் அரும்பங்காற்றியுள்ளார்.

அத்துடன் 1990ஆம் ஆண்டுகாலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்ற பல்வேறு கடத்தல்கள், படுகொலைகள்,இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக சர்வதேச ரீதியாக குரல் கொடுத்தும் வந்துள்ளார்.

இந்த நிலையில் 1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி ஏறாவூர் பகுதி ஊடாக பயணித்துக்கொண்டிருந்தபோது அருட்தந்தை காணாமல்போயிருந்தார்.

# சூரியமண்டலத்திற்குள் நுழைந்து நாசா விண்கலம் வரலாற்று சாதனை



பூமி சூரியனில் இருந்து சுமார் 9.3 கோடி மைல் தொலைவில் உள்ளது. முதன்முதலாக சூரியனை ஆய்வு செய்ய பார்கர் சோலார் புரோப் என்ற விண்கலத்தை நாசா விஞ்ஞானிகள் தயாரித்தனர். இந்த விண்கலம் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்திலுள்ள கேப் கேனவரல் ராக்கெட் ஏவுத் தளத்திலிருந்து கடந்த 2018 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் அனுப்பப்பட்டது.

சூரியன் குறித்த தகவல்களை சேகரிக்க பார்கர் விண்கலம் சூரியனுக்கு 1.5 கோடி மைல் (2.4 கோடி கிலோமீற்றர்) தொலைவில் சென்று உள்ளது. இந்த விண்கலம் இறுதியில், சூரியனின் மேற்பரப்பில் இருந்து சுமார் 4 இலட்சம் மைல் (6 லட்சம் கிலோமீற்றர்) தொலைவில் பயணிக்கும், இது முந்தைய எந்த விண் கலத்தையும் விட ஏழு மடங்கு நெருக்கமாக இருக்கும்.

சூரியனின் வளிமண்டல மேலடுக்கான கொரோனாவை ஆய்வு செய்வதற்காக இந்த விண்கலம் செலுத்தப்பட்டுள்ளது.

நாசா விண்கலம் பார்க்கர் சோலார் ஒரு வரலாற்று சாதனையாக முதல் முறையாக சூரியனின் வளிமண்டலத்தில் நுழைந்து உள்ளது. இதுகுறித்து நாசா, சூரியனின் வளிமண்டலத்தில் நுழைவது ஒரு காலத்தில் சாத்தியமற்றது என்று நினைத்ததை இப்போது செய்துள்ளது என்று தெரிவித்து உள்ளது.

நாசா கூற்றுப்படி, விண்கலம் ஏப்ரல் 28 அன்று சுமார் 2 லட்சம் டிகிரி பாரன்ஹீட் வெப்பமான சூரியனின் வளிமண்டலத்தில் வெற்றிகரமாக நுழைந்தது. பார்க்கர் சோலார் புரோப் வெற்றிகரமாக சூரியனின் வளிமண்டலத்திற்குள் நுழைந்ததை நாசா தற்போது உறுதி செய்துள்ளது. தற்போது பிரபஞ்சத்தின் பல கிரகங்கள் மற்றும் நிலவுகள் தொடர்பான பல அரிய உண்மைகளை விண்வெளி ஆய்வாளர்கள் தொடர்ந்து கண்டறிந்து அசத்தி வந்தாலும், நமது சூரிய மண்டலத்தின் ஆதாரமையமான சூரியன் குறித்த பல தகவல்கள் இன்னும் மர்மமாகவே இருந்து வருகின்றன.

சூரியன் குறித்த தகவலை திரட்டி வர கடந்த 1970 களில் விண்வெளிக்குச் சென்ற முதல் விண்கலமான ஹீலியஸ் 2, சூரியனை சுமார் 2.7 கோடி மைல் தூரத்தில் இருந்துதான் ஆய்வு செய்ய முடிந்தது. அதனால் உலக அழிவை ஏற்படுத்தக்கூடிய சூரிய புயல் தொடர்பான போதிய தகவல்களை இதுவரை திரட்ட முடியவில்லை.

ஒவ்வொரு நொடியும் பல்லாயிரக் கணக்கான டிகிரி செல்சியஸ் வெப்பத்தைக் கக்கும் சூரியனையே, சுமார் நாற்பது லட்சம் மைல்கள் தொலைவில் அல்லது மிக அருகில் சென்று ஆய்வு செய்யக்கூடிய பார்க்கர் சோலார் புரோப் செயற்கைகோளை நாசா அனுப்பி வைத்தது.

சூரியன் மற்றும் பெரும் அழிவை ஏற்படுத்தக் கூடிய சூரிய புயல் அல்லது சூரிய பருவநிலை தொடர்பான புதிய தகவல்களை சேகரித்து பூமிக்கு அனுப்பக் கூடிய இந்த பார்க்கர் சோலார் புரோப், சூரிய பரப்பின் 64 லட்சம் கிலோமீற்றர் பகுதியில் பறக்கும் என்றும், சுமார் 1,400 செல்சியஸ் (2,500 பாரன்ஹீட்) வெப்பம் மற்றும் மிகப்பெரிய கதிரியக்கத்தையும் தாங்கி, எதிர்கொண்டு ஆய்வு செய்யும் திறன்கொண்டது என்றும் கூறப்பட்டது.

ஏனென்றால், இந்த செயற்கைகோள், அதீத தட்பவெப்ப நிலைகளை தாங்கும் சுமார் 11.4 சென்றிமீற்றர் (4.5 அங்குலம்) தடிமன் உள்ள கார்பன் காம்போசிட்டால் ஆன கவசத்தைக் கொண்டது. மணிக்கு சுமார் 7,25,000 கிலோமீற்றர் வேகத்தில் பறக்கக் கூடிய திறன்கொண்ட பார்க்கர் சோலார் புரோப், சுமார் 6 வருடங்கள் மற்றும் 11 மாதங்களில், சூரியனை 24 முறை சுற்றி வந்து ஆய்வு செய்யும் என்பது குறிப்பிடத்தக்கது.



## ‘பெண்களை பசுக்களாக’ காட்டிய விளம்பரம்; மன்னிப்புக் கேட்ட தென்கொரிய நிறுவனம்

பெண்களை பசுக்களைப்போல் சித்தரித்த விளம்பரம் தென்கொரியாவில் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், அதனை தயாரித்த பிரபல பால் உற்பத்தி நிறுவனம் மன்னிப்பு கேட்டுள்ளது.

சியோல் மில்க் என்ற பிரபல பால் உற்பத்தி நிறுவனத்தின் விளம்பரத்தில், வயல்வெளியில் இருக்கும் பெண்களை ஒருவர் ரகசியமாக படம் பிடிக்கிறார். பின், அங்குள்ள பெண்கள் பசுக்களாக மாறுகின்றனர். பொதுமக்களிடையே வலுத்த எதிர்ப்பு காரணமாக, அந்தக் காணொலியை யூடியூப்பிலிருந்து அந்நிறுவனம் நீக்கியுள்ளது. ஆனால், பலர் அந்த காணொலியை இணையத்தில் பதிவேற்றம் செய்ய, அது வைரலாகியுள்ளது.

சிலர் அந்த காணொலியில் இருந்த ஆணின் நடத்தையை, மொல்காவுடன் ஒப்பிட்டுள்ளனர். தென்கொரியாவில் மொல்கா என்றால் சட்டத்துக்கு புறம்பாக மனிதர்களை ரகசியமாக படம் பிடிக்கும் செயல்.

கடந்த மாதம் 29ஆம் திகதி வெளியான பால் விளம்பரத்தை பார்த்து சங்கடம் அடைந்தவர்கள் அனைவரிடமும் மனப்பூர்வமாக மன்னிப்பு கேட்டுக்கொள்கிறோம் என்று சியோல் மில்க்கின் தாய் நிறுவனமான சியோல் மில்க் கூட்டுறவு நிறுவனம் மன்னிப்பு கேட்டுள்ளது.

இந்த விவகாரத்தை தீவிரமாக எடுத்துக்கொண்டுள்ளோம். இதுகுறித்து மறு ஆய்வு நடத்தி, வருங்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நடக்காமல் தவிர்க்க மேலும் கவனமாக இருப்போம். நாங்கள் மன்னிப்புக் கோரி தலை வணங்குகிறோம், என்று தெரிவித்துள்ளது.

# மலேசியாவில் படகு விபத்து 16பேர் பரிதாபச் சாவு



மலேசியாவின் தெற்கு பகுதியில் இடம்பெற்ற படகு விபத்தில் 16பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 27 பேரை காணவில்லை.

அண்டை நாடான மலேசியாவுக்குள் சட்டவிரோதமாக நுழைய முற்பட்ட சுமார் 60 இந்தோனேஷியர்களை ஏற்றிச் சென்ற கப்பல், தெற்கு மாநிலமான ஜோகூரில் புதன்கிழமை புயல் காலநிலையில் கவிழ்ந்தது.

உயிரிழந்தவர்கள் மற்றும் காணாமல் போனவர்களில் பெரும்பாலானோர் இந்தோனேஷியாவைச் சேர்ந்தவர்கள் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

திடீரென ஏற்பட்ட மோசமான வானிலை காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காணாமல் போனவர்களை தேடும் பணியில் மீட்புப்படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கத்தை கடக்கும் போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர்களில் ஏழு ஆண்களும் நான்கு பெண்களும் அடங்குவர். மேலும் 20 ஆண்களையும் இரண்டு பெண்களையும் மீட்புப் படையினர் உயிருடன் மீட்டுள்ளனர்.

காணாமல்போனவர்கள் உயிருடன் இருப்பது சாத்தியமில்லை என தேடுதல் மற்றும் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஜேர்மனியில் ஆளுநரைக் கொலை செய்யச் சதி




கொரோனா வைரஸ் கட்டுப்பாடுகள் மற்றும் தடுப்பூசிகள் தொடர்பாக மாநில ஆளுநரை கொலை செய்வதாகக் கூறப்படும் அச்சுறுத்தல்கள் குறித்து விசாரணைகளை கிழக்கு ஜேர்மனியில் பொலிஸார் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆரம்பித்தமையுடன் அதிகாலை முதல் சோதனைகளை மேற்கொண்டனர். தீவிர வன்முறைச் செயலுக்கான சந்தேகத்திற்குரிய திட்டங்களின் விசாரணையில் டிரெஸ்டனில் உள்ள பல வீடுகள் சோதனையிடப்படுகின்றன. கடந்த வாரம் தொலைக்காட்சி ஒன்றில் வெளியான செய்தியின் மூலம் விசாரணை தூண்டப்பட்டது. டெலிகிராமில் ஒரு குழு சாக்சோனியின் மாநில ஆளுநர் மைக்கேல் கிரெட்ச்மர் மற்றும் மாநில அரசாங்கத்தின் பிற உறுப்பினர் களைக் கொல்லும் திட்டங்களைப் பற்றி விவாதித்தது. டிரெஸ்டன் சாக்ஸோனியின் தலைநகரம் ஆகும். இது கொரோனா வைரஸ் கட்டுப்பாடுகளுக்கு எதிராக அடிக்கடி போராட்டங்களைக் கண்டுள்ளது மற்றும் ஜேர்மனியின் குறைந்த தடுப்பூசி விகிதத்தைக் கொண்டுள்ளது.

அறிக்கையின்படி, குழுவின் 103 உறுப்பினர்கள் தடுப்பூசிகள், மாநிலம் மற்றும் தற்போதைய கொரோனா வைரஸ் கொள்கையை நிராகரித்துள்ளனர். கிரெட்ச்மர் மற்றும் பிறருக்கு எதிராக தேவைப்பட்டால் ஆயுத பலத்துடன் எதிர்க்க வேண்டும் என்று மக்கள் அழைப்பு விடுக்கும் ஓடியோ செய்திகள் அதில் இடம்பெற்றுள்ளன.

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு





# தடையை மீறி தமிழகம் முழுவதும் அ.தி.மு.க. கண்டன ஆர்ப்பாட்டம்

தேர்தலின்போது கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை தி.மு.க. அரசு நிறைவேற்றவேண்டுமென வலியுறுத்தி, தமிழ்நாடு முழுவதும் இன்று அ.தி.மு.கவினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பெற்றோல், டீசல் மீதான மாநில அரசின் வரிகளை உடனடியாக குறைக்க வேண்டும், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு உதவிகள் வழங்க வேண்டும், வெள்ளத்தால் பயிர்களை இழந்த விவசாயிகளுக்கு போதுமான இழப்பீடு வழங்க வேண்டும், பொங்கல் கொண்டாட அனைவருக்கும் பொங்கல் பரிசுத்தொகை அறிவிக்க வேண்டும், அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தும், தேர்தல் நேரத்தில் தி.மு.க. அறிவித்த வாக்குறுதிகளை இன்னும் நிறைவேற்றாததை கண்டித்தும் மாநிலம் தழுவிய அளவிலான ஆர்ப்பாட்டத்தை அ.தி.மு.கவினர் மேற்கொண்டனர்.

இன்று காலை 10.30 க்கு அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. சென்னையில் இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஒரு மாவட்டச் செயலாளர் என்ற அளவில் அலுவலர்கள் உள்ளமையால், நான்கு இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

இதேபோன்று தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 60 இடங்களில் அ.தி.மு.கவினர் ஆர்ப்பாட்டங்களை ஒழுங்குசெய்திருந்தனர். இந்தப் போராட்டங்களுக்கு பொலிஸ் அனுமதி வழங்கப்படவில்லையெனினும் தடையை மீறி ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன.

# தமிழ்த்தாய் வாழ்த்து இனி தமிழக அரசின் மாநிலப்பாடல் உரிய மரியாதையை அனைவரும் வழங்க அரசு ஆணை



தமிழ்த்தாய் வாழ்த்து இனி தமிழக அரசின் மாநிலப்பாடலாக இருக்கும் என அறிவித்துள்ள தமிழக அரசு, தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடுகையில் அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்துவது அவசியம் எனவும் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதுதொடர்பாகதமிழகஅரசுவெளியிட்டுள்ளஅரசாணையில், தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் பாடும்போது இனி அனைவரும் தவறாமல் எழுந்து நின்று மரியாதை செலுத்தவேண்டும். இதிலிருந்து மாற்றுத்திறனாளிகளுக்கு மட்டும் விலக்கு அளிக்கப்படுகிறது.

தமிழ்த்தாய் வாழ்த்தை, பதிவு செய்யப்பட்ட கருவிகளுக்குப் பதிலாக பயிற்சி பெற்றவர்களை கொண்டு வாய்மொழியில் சொந்த குரலோசையில் பாடவேண்டும். 55 விநாடிகளில் முல்லைப்பாணி ராகத்தில் மூன்றன் நடையில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடப்பட வேண்டும், என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# கேரளாவில் பறவைக் காய்ச்சல் பரவல் கோவை எல்லைகளில் கண்காணிப்பு



கேரளா மாநிலம் ஆலப்புழா மாவட்டத்தில் பறவைக் காய்ச்சல் கண்டறியப்பட்டுள்ள நிலையில் கோவை மாவட்டத்தில் உள்ள தமிழக - கேரள எல்லைப் பகுதிகளில் சோதனை நடவடிக்கைகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

கால்நடை பராமரிப்புத் துறையினர் கேரளாவிலிருந்து வரும் வாகனங்களுக்கு கிருமிநாசினி தெளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். கோவை மாவட்டம் வழியாக கேரளாவிற்கு காய்கறிகள், இறைச்சி, முட்டை போன்றவை செல்கின்றன. கேரளாவில் இருந்து திரும்பி வரும் இந்த வாகனங்களைச் சோதனை செய்து தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நடவடிக்கைகளை கோவை மாவட்ட ஆட்சியர் ஜி.எஸ்.சமீரன் நேரில் பார்வையிட்டு கால்நடை பராமரிப்பு துறை அதிகாரிகளிடம் நடவடிக்கை குறித்து கேட்டறிந்துள்ளார்.



# தி.மு.கவினர் வதந்திகளையே பரப்பி வருகின்றனர் பா.ஜ.க. தமிழக தலைவர் அண்ணாமலை குற்றச்சாட்டு

திருவண்ணாமலை மாவட்டம் வடக்கு, தெற்கு மண்டலத் தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்க திருவண்ணாமலை சென்றுள்ள தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் இன்று சுவாமி தரிசனம் செய்தார்.

பின்னர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர், அ.தி.மு.கவினர் வீடுகளில் காழ்புணர்ச்சி காரணமாகத்தான் லஞ்ச ஒழிப்புத்துறையால் சோதனை நடத்தப்பட்டு வருகிறது. மு.க.ஸ்டாலின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது பேசியதுதான் இப்போது அ.தி.மு.க. நிர்வாகிகள் மீது வழக்குகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மாரிதாஸ் வழக்கில் மதுரை உயர்நீதிமன்ற நீதிபதி தெரிவித்த கருத்துகளை ஏற்றுக்கொள்ள முடியாமல் தி.மு.கவினர் வதந்திகளை பரப்பி வருகின்றனர். நீதித்துறையை அரசியலுக்கு மேலாக தி.மு.க. வைக்கவேண்டும். நீதித்துறையில் பா.ஜ.க. ஒருபோதும் தலையிடாது. சில வழக்குகளில் பா.ஜ.கவுக்கு எதிராக தீர்ப்புகள் வந்துள்ளமையே அதற்குச் சான்றாகும். யூட்டியூபர் மாரிதாஸ் வழக்கை விசாரித்த நீதிபதி பா.ஜ.கவைச் சேர்ந்தவர் என்பது தவறான கருத்தாகும். இப்படியான அபத்தமான குற்றச்சாட்டுகளை நிறுத்திக் கொள்ளுங்கள், என்று தெரிவித்தார்.

தமிழகத்தில் 70 சதவீதம் பேர் கொரோனாத் தடுப்பூசியைச் செலுத்தி இருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 30 சதவீதம் பேர் உடனடியாக தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும். அதன் மூலம் ஒமிக்ரோன் பாதிப்பிலிருந்து தப்பலாம்.

எனவே தயவு செய்து அனைவரும் இரண்டு கட்ட தடுப்பூசிகளையும் செலுத்திக் கொள்ளுங்கள். தற்போதைக்கு வேறு தடுப்பூசிகள் தேவைப்படாது, என்றும் அவர் குறிப்பிட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## ஓட்டமாவடி கோட்டத்தில்

# தரம் ஐந்து புலமைப்பரிசில் மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்க வேலைத்திட்டம்





கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டப் பாடசாலைகளில் கல்வி கற்று வரும் தரம் ஐந்து மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்க விசேட வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப் பட்டுள்ளது.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை எழுத வுள்ள மாணவர்களுக்கு மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தினால் நடாத்தப்பட்ட மூன்று முன்னோடி பரீட்சை பெறுபேறுகளின் படி இந்த விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பரீட்சை பெறுபேற்றில் 70க்கு குறைவாக புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும், 130 புள்ளிகளுக்கு கூடுதலாகவும் வெட்டுப் புள்ளிக்கு குறைவாகவும் பெற்றுக் கொண்ட மாணவர்களை யும் இனங்கண்டு அவர்களுக்கு பரிகார செயற் பாடுகளை மேற்கொள்ள இத் திட்டம் முன்னெடுக் கப்பட்டுள்ளது.

அந்தவகையில், மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் தரம் ஐந்து புலமைப் பரிசில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வொன்று மீராவோடை அல் ஹிதாயா வித்தியாலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளரும் மட்டக்களப்பு மத்தி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளருமான வீ.ரீ.அஜ்மீர் தலைமையில் நடைபெற்ற இந்த செயல மர்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். றமீஸ், ஆசிரிய ஆலோசகர் எம்.ஏ.ஜாபிர் கரீம் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.



# அம்பாறை கஞ்சிகுடிச்சாறில் விநாயகர் சிலை உடைப்பு

அம்பாறை, திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கரைப்பற்று– பொத்துவில் பிரதான வீதியில் கஞ்சிகுடிச்சாறு சந்தியில் வைக்கப்பட்டு இருந்த விநாயகர் சிலை விஷமிகளால் உடைக்கப்பட்டுள்ளதையிட்டு மக்கள் கவலை தெரிவித் துள்ளனர்.

இந்த சிலை மக்களின் கோரிக்கைக்கு அமைவாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பி.எச்.பியசேனவினால் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டு இருந்தது.

சிலை திருக்கோவில் கஞ்சிகுடிச்சாறு கிராமத்துக்குச் செல்லும் பொத்துவில் பிரதான வீதியில் வைக்கப்பட்டு இருந்த துடன் இப் பகுதியில் வாழும் மக்களும் வீதியால் செல்வோரும் வழிபட்டு வந்தனர்.

இனம் தெரியாத நபர்களால் நேற்றிரவு விநாயகர் சிலை உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




# பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து மதஸ்தலங்களுக்கு உதவிகள் வழங்கல்

2021ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு – செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் நாடாளு மன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் முதுநபீனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி யிலிருந்து 8,25,000 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருள்கள் இறக்காமம் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பாடசாலைகள், சங்கங்கள், பொது நிறுவனங்கள், கழகங்கள், மதஸ்தலங்களுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இறக்காமம் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ. சி. அஹமட் நஸீலின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் முதுநபீனின் இணைப்புச் செயலாளர் எஸ்.டி. நியாஸ் பங்கேற்று உரிய நிறுவனங்களுக்கு பொருள்களை வழங்கி வைத்தார். மேலும் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல். ஹம்சார், சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல். ஆஹிர், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரதேச இணைப்புச் செயலாளர் எஸ்.எம்.எம். றஜா உட்பட உள்ளூர் அரசியல் பிரமுகர்கள், கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர் கள், இளைஞர் கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# அஷ் ஸுஹரா வித்தியாலத்தில் முப்பெரும் விழா நேற்று நடந்தது




கல்முனை அஷ் –ஸுஹரா வித்தியாலயத்தில் முப்பெரும் விழா நேற்று பாடசாலை அதி பர் எம்.எஸ்.எச்.ஆர். மஜிதிய்யா தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற் றது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தி னராக கல்முனை வலயக் கல் விப் பணிப்பாளர் எஸ்.புவனேந் திரன் கலந்து கொண்டார்.

நிகழ்வுக்கு கௌரவ விருந்தி னராக கல்முனை வலயக் கல்விப் பணிமனையின் கணக் காளர் வை.ஹபிபுல்லாஹ், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பாடசாலை நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

விழாவில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாண வர்களை கௌரவிக்கும் நிகழ்வும், வலயக் கல்வி பணிப் பாளர் மற்றும் கணக்காளர் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வும், இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களை கௌரவித்து வழியனுப்பும் நிகழ்வு என்பனவும் இம் முப் பெரும் விழாவில் இடம்பெற்றது.



# ஆரோக்கியமான உணவுகள் தயாரிக்கும் பயிற்சிகள் ஏறாவூரில் நடைபெற்றன

ஏறாவூர் நகர விவசாய விரிவாக்கல் பிரிவு விவசாயப் ‘போதனாசிரியை எம்.எச். முர்ஷிதாஷிரீன் தலைமையில் பெறுமதிசேர் உணவுப் பதார்த்தங்கள் ஆரோக்கியமான உணவு’ எனும் பயிற்சி வழங்கல் ஏறாவூர் மிச்நகர் கிராமத்தில் வீட்டுத்தோட்ட கமக்காரர் மகளிர் சங்கத்தைச் சேர்ந்த மகளிர் விவசாயிகளுக்கு நேற்று இடம்பெற்றது.

ஆரோக்கியமான உணவுகள் தயாரிக்கும் செய்முறைப் பயிற்சிகள் இங்கு இடம்பெற்றன.

இந்நிகழ்வில் ஏறாவூர் நகர விவசாய விரிவாக்கல் பிரிவு அலுவலர் எம்.சி.எம். நியாழ், பயிலுநர் எஸ். சுவர்னேஸ் உட்பட பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

இலங்கையிலுள்ள 10,121 அரசாங்கப் பாடசாலைகளில் கல்வி பயிலும் 41 லட்சம் மாணவர்களில் 20.6 வீதம் பேர் நிறை குறைந்தவர்களாகவும் 7.09 வீதமான மாணவர்கள் குட்டையர்களாகவும் 2.04 வீதமானோர் மேலதிக நிறை கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர் எனகல்வி அமைச்சு வெளியிட்டுள்ள திட்டக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யுகதனவி மின் உற்பத்தி ஒப்பந்தம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதிக்க வாய்ப்பில்லை!

## ஜே.வி.பி. சுட்டிக்காட்டு



நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படுகின்றமையால், பொதுமக்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

புத்தளத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹந்துன்நெத்தி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நாடாளுமன்றத்தை ஒத்திவைக்கும் நடவடிக்கையால் யுகதனவி மின் உற்பத்தி நிலைய ஒப்பந்தம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் ஆராய்வதற்கான சாத்தியக்கூறுகளை முடிவுக்கு கொண்டு வந்துள்ளதாக ஹந்துன்நெத்தி கூறியுள்ளார்.

மேலும் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்ட போதிலும், பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை எரிவாயு தொடர்பான விபத்துக்களால் பொதுமக்களும் ஆபத்தில் உள்ளனர் எனவும் ஹந்துன்நெத்தி கவலை வெளியிட்டுள்ளார்.

நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதால், பொதுமக்கள் தங்கள் பிரச்சினைகளை மக்கள் பிரதிநிதிகள் ஊடாகத் தெரிவிக்க முடியாது எனத் தெரிவித்த ஹந்துன்நெத்தி, இது போன்ற நேரத்தில் பொறுப்பான நிதி அமைச்சர் நாட்டில் இல்லை என்றும் கூறியுள்ளார்.

அந்தவகையில் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணப்படவில்லை என்றும், வர்த்தகர்கள் டொலர் தட்டுப்பாடு காரணமாக இறக்குமதி, ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட முடியாத நிலையில் உள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் அரச பொறிமுறைமை சீர்குலைந்துள்ளது. அதன்பொறுப்பை ஏற்க அமைச்சர் எவரும் இல்லை எனவும் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

இதேவேளை விவசாய சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விவசாய அமைச்சர் தீர்வை வழங்காத அதேவேளை, நுகர்வோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வர்த்தக அமைச்சர் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## யுகதனவி ஒப்பந்தத்துக்கு எதிரான மனுக்களின் விசாரணைகள் ஆரம்பம்

கெரவலப்பிட்டி யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்திற்கு மாற்றும் தீர்மானத்தை ரத்து செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், உயர் நீதிமன்றத்தில் நேற்று (வியாழக்கிழமை) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, புவனேக அலுவிஹாரே, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட மற்றும் எல்.ரீ.பீ. தெஹிதெனிய ஆகிய ஐவரடங்கிய நீதிபதிகள் குழு முன்னிலையில் மேற்படி மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டை மேம்படுத்தும் சவாலை ஏற்கத் தயார்

### தேசிய மக்கள் சக்தி உறுதி

நாட்டை மேம்படுத்தும் சவாலை ஏற்க தயாராக இருப்பதாக தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

நேற்று (வியாழக்கிழமை) காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவித்த அவர்-

பொதுமக்கள், தங்கள் குறைகளுக்கு புதிய வழியையும் தீர்வுகளையும் தேட ஆரம்பித்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நாட்டின் இளைஞர்கள், தொழிலதிபர்கள், தொழில் வல்லுநர்கள், கிராமப்புற மக்கள் மற்றும் அனைத்து சமூகத்தினருக்கும் நம்பிக்கையை ஊட்டுவதில் கட்சி கவனம் செலுத்தும் என்றும், இதற்காக குடிமக்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் அநுர குமார திஸாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.



## பதில் நிதியமைச்சராக ஜீ.எல்.பீரிஸ் நியமனம்!

பதில் நிதியமைச்சராக ஜீ.எல்.பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அமெரிக்கா சென்றுள்ள காரணத்தால், அவர் நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## எழிலன் உட்பட காணாமல் ஆக்கப்பட்டோர்; வழக்கின் தீர்ப்பு அடுத்த வருடத்தில்

விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் எழிலன் உள்ளிட்ட இறுதிக்கட்டபோரில் இராணுவத்தினரிடம் சரணடைந்து, காணாமல்போனவர்களை முன்னிலைப்படுத்துமாறு தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு மீதான தீர்ப்பு, அடுத்த வருடத்துக்குத் தவணையிடப்பட்டதாக சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான வழக்கின் தீர்ப்பு வவுனியா மேல்நீதிமன்றத்தால், நேற்று (வியாழக்கிழமை) அறிவிக்கப்படவிருந்த நிலையில், மனுதாரர்கள் சார்பில் நீதிமன்றில் முன்னிலையாகிய சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

இறுதிப்போரின் கடைசி நாள்களில் இராணுவத்திடம் சரணடைந்து, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுவிற்கான தீர்ப்பு நேற்று வழங்கப்படவிருந்தது.

இந்த வழக்கு தொடர்பான பூர்வாங்க விசாரணைகள் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்று, அந்த நீதிமன்றம் ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்திருந்தது.

அந்த அறிக்கை மீதான வவுனியா மேல்நீதிமன்றின் தீர்ப்பு இன்று வழங்கப்படுவதாக நியமிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்தத்தீர்ப்பு இன்னும் தயாரித்து முடிக்கப்படவில்லை என்று வவுனியா மேல்நீதிமன்றம் நேற்று எமக்கு அறிவித்துள்ளது. அத்துடன் எதிர்வரும் வருடம் மாசி மாதம் 14 ஆம் திகதி இந்த உத்தரவு அறிவிக்கப்படும்என்றவிடயம்தெரிவிக்கப்பட்டுள்ளது' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த வழக்கு, இலங்கை இராணுவத்திற்கும் அரசாங்கத்திற்கும் சட்டமா அதிபருக்கும் எதிரானது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மக்கள், காணாமல் போனமை தொடர்பாக இலங்கை இராணுவமும் அரசாங்கமுமே பொறுப்புக்கூற வேண்டும் என்ற விடயத்தை கருப்பொருளாகக் கொண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. மேலும் வழக்கில் இராணுவத்தின் சார்பாக அவர்களுடைய சட்டத்தரணிகள் மன்றில் பிரசன்னமாகியிருந்தனர். மேலும் சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அரச சட்டவாதி யொகான் அபேவிக்கிரம பிரசன்னமாகியிருந்தார். வழக்கைத் தாக்கல் செய்த மனுதாரர்களான முன்னாள் மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் மற்றும் ஏனைய காணாமல் போனவர்களின் குடும்பத்தினரும் மன்றில் பிரசன்னமாகியிருந்தனர்.

## புல்லாவெளி செபஸ்தியர் தேவாலய கூரை இடிந்து வீழ்ந்ததில் ஒருவர் படுகாயம்



வடமராட்சி கிழக்கு- வெற்றிலைக்கேணி, புல்லாவெளி செபஸ்தியர் தேவாலய கூரை இடிந்து வீழ்ந்ததில், நேற்று (வியாழக்கிழமை) ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கடந்த புதன்கிழமை மாலை வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு கிராமத்தைச் சேர்ந்த இளம் குடும்பம், தமது நேற்றிக்கடன்களை நிறைவேற்றுவதற்காக சென்று,அங்குதங்கியிருந்து வழிபாட்டில் ஈடுபட்ட வேளையிலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

குறித்த சம்பவத்தில் கட்டைக்காட்டைச் சேர்ந்த இளைஞன் வினோத் என்பவர் பலத்த படுகாயமடைந்துள்ள நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இந்த அனர்த்தத்தில் குறித்த நபரின் மனைவிக்கு எந்தவிதமான சேதங்களும் ஏற்படவில்லை என்பதுடன், அவர்களது மோட்டார் சைக்கிள் பலத்த சேதத்திற்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலய முகப்பு இடிந்து விழுந்ததிற்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், பொலிஸார் இதுதொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.12.2021இல் வெளியிடப்பெற்றது.